# குன்றத்தூர் நகராட்சி

## காஞ்சிபுரம் மாவட்டம்

# 2022-2023ம் ஆண்டின்

# நிர்வாக அறிக்கை

# குன்றத்தூர் நகராட்சி

## 2022-2023ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### பணி அமைப்பும் தன்மையும்

குன்றத்தூர் நகராட்சியானது பழமையும், பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், அருள்மிகு நாகேச்சர சுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களை கொண்ட கோயில் நகரமாகும்.

இந்நகராட்சியானது குன்றத்தூர், திருநாகேஸ்வரம், வெங்கடாபுரம், மணஞ்சேரி, மூன்றாம்கட்டளை ஆகிய வருவாய் கிராமங்களைக் கொண்டது. குன்றத்தூர் பேரூராட்சியானது ஊரக வளர்ச்சி இயக்குநர் சென்னை – 9 அவர்களின் கடிதம் மூ.மு.48491/78 E1 நாள்.01.04.1978ன் படி தேர்வுநிலை பேரூராட்சியாக இயங்க ஆரம்பித்தது. அரசாணை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

குன்றத்தூர் நகராட்சியானது அரசாணை (நிலை) எண். 127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.16.12.2021ன்படி 18 வார்டிலிருந்து 30 வார்டுகளாக மாற்றம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை (நிலை) எண். 6 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.10.01.2022 (அரசிதழ் எண்.30 நாள்.10.01.2021) ன்படி வார்டு எண்.2,29 ஆதி திராவிடர் (பொது) பிரிவிற்கும் வார்டு எண்.17, 28, 30, ஆதி திராவிடர் (பெண்கள்) பிரிவிற்கும் வார்டு எண்.3, 5, 6, 7, 9, 11, 13, 14, 15, 21, 25, 26 பெண்கள் (பொது) பிரிவிற்கும் மற்ற வார்டுகள் பொது எனவும் இட ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

### ஆட்சி எல்லை :-

இந்நகராட்சி பரப்பளவு 9.00 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இந்நகராட்சியின் எல்லையில் அறிக்கை ஆண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை.

1991ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கட்தொகை 22,788, 2001 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 25,007 ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 42,126 ஆகும்.

**<u>நகரமன்ற தேர்தல்</u>** :-

குன்றத்தூர் பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நேரடி தேர்தல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 28.01.2022 அன்று அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 19.02.2022 அன்று நடைபெற்ற நகரமன்ற தேர்தலில் 30 எண்ணிக்கையிலான நகரமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து 02.03.2022 அன்று வெற்றி பெற்ற நகரமன்ற உறுப்பினர்களுக்கான முதல் கூட்டம் நடைபெற்றதை தொடர்ந்து 04.03.2022 அன்று தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்வு செய்யப்பட்டு நகரமன்ற மன்றம் இயங்கி வருகிறது.

**அ. நகரமன்ற கூட்டங்கள்**

நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் 01.04.2022 முதல் 31.03.2023 வரை அறிக்கையாண்டில் 9 சாதாரண கூட்டங்கள், 2 அவசரக் கூட்டங்கள் மற்றும் 1 சிறப்பு கூட்டம் ஆக மொத்தம் 12 கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 324 ஆகும்.

**ஆ. நியமனக்குழு கூட்டங்கள்**

அறிக்கையாண்டில் நகரமன்ற தலைவர் மற்றும் நியமனக்குழு உறுப்பினர் மூலம் இரண்டு நியமனக்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, இதில் கருணை அடிப்படையிலான நியமனத்தின் கீழ் இரவு காவலர் – 1 மற்றும் இளநிலை உதவியாளர் – 2 ஆக மொத்தம் 3 பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளது.

**இ) அறிக்கையாண்டில் பணியாற்றிய ஆணையர்கள் விவரம்**

| வ.எண். | நகராட்சி ஆணையர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு.ந.தாமோதரன், ஆணையர் | 01.04.2022 | 31.03.2023 |

**ஈ) மேலாட்சி** :-

அறிக்கையாண்டில் நகராட்சி பணியாளர்களின் சம்பள செலவு ரூ.129.87 இலட்சம் ஆகும்.

அலுவலர்களையும், பணியாளர்களையும் பணி அமர்த்தல், தண்டித்தல் ஆகியவை பற்றிய பணிவிதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

## பொறியியல் பிரிவு :-

அறிக்கையாண்டில் பணியாற்றிய நகராட்சி பொறியாளர்கள் விவரம் :-

| வ.எண். | நகராட்சி பொறியாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு.சி.வெங்கடேசன் (பொ) | 01.04.2022 | 12.06.2022 |
| 2 | திருமதி.ப.நளினி (பொ) | 13.06.2022 | 31.03.2023 |

பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு இவ்வாண்டு ஆன செலவு ரூ.19.24 இலட்சம் ஆகும்.

## குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை

குன்றத்தூர் நகராட்சியானது 30 வார்டுகளை கொண்ட இரண்டாம்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 42126, தற்போதைய குடியிருப்புகள் 17946, மக்கள் தொகை சுமார் 71784. இந்நகராட்சியின் பரப்பளவு 9 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

## குடிநீர் தேவை

இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையில் நகராட்சியின் தினசரி குடிநீர் தேவை 64.61 லட்சம் லிட்டர் ஆகும். மேலும் பெறப்படும் குடிநீரானது 30 வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## குடிநீர் ஆதாரம்

தற்போது நகராட்சியின் உள்ளூர் குடிநீர் ஆதாரமான விசைபம்பு-73 எண்ணிக்கை, சிறுமின்விசை பம்பு-83 எண்ணிக்கை, ஆழ்துளை கிணறு-1 வாயிலாக 5.02 MLD குடிநீர் எடுக்கப்பட்டு, 19.20 லட்சம் லிட்டர் (3.00 LL – 4 Nos, 2.00 LL – 2 Nos, 1.00 LL– 2 Nos, 0.60 LL – 2 Nos) கொள்ளளவு கொண்ட 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள்

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் திட்டம் 2022-2023ம் ஆண்டின் கீழ் குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பஜார் தெருவில் உள்ள 3 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட 40 வருடங்களுக்கும் மேலான பழைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை இடித்து புதியதாக 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் பணிக்கு ரூ.150.00 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## சாலைகள் குறித்த விவரம் :-

குன்றத்தூர் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் மொத்த நீளம் 156.090 கி.மீ . நகராட்சியின் ஊடே செல்லும் மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையின் நீளம் 8.00 கி.மீ ஆகும். நகராட்சியில் 30 வார்டுகளில் 1315 தெருக்கள் உள்ளது. இத்தெருக்களில் தார்சாலை 98.02 கி.மீ, சிமெண்ட் சாலை 13.22 கி.மீ, பேவர் பிளாக் சாலை 17.28 கி.மீ, ஜல்லி சாலை 3.07 கி.மீ மற்றும் மண் சாலைகள் 24.51 கி.மீ ஆகவும் உள்ளது.

## தெருவிளக்குகள் :-

குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 481 எண்ணிக்கை எல்.இ.டி விளக்குகள், 1314 சி.எப்.எல் விளக்குகள், 1009 குழல் விளக்குகள், 553 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 22 உயர்கோபுர விளக்குகள் என ஆக மொத்தம் 3379 தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## தற்போது மேற்கொள்ளப்பட உள்ள பராமரிப்பு பணிகள்

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1009 குழல் விளக்குகள், 1314 CFL விளக்குகள், 553 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 22 உயர்கோபுர மின்விளக்குகள் ஆகிய 2898 தெருமின் விளக்குகளை புதிய அடர்மின் விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.324.06 லட்சம் மதிப்பீட்டில் 27.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## <u>திட்டப்பணிகள் விவரம்</u>

### 1. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்

குன்றத்தூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 3 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22** | வெங்கடாபுரம் சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் | 150.00 | பணி நடைபெற்று வருகிறது |
| 2 | | வார்டு எண்.17 பூபதி அவென்யூ பூங்கா அமைத்தல் | 45.00 | முடிவுற்றது |
| 3 | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்** 2022-23 | வார்டு எண்.30 சர்வே எண்.757 நத்தம் பகுதியில் அறிவுசார் மையம் அமைத்தல் | 195.00 | பணி நடைபெற்று வருகிறது |
| 4 | | மெட்ரோ ஹைடெக் ரெஸிடன்ஸி வார்டு எண்.19 சர்வே எண்.1379/A1-ல் பூங்கா அமைத்தல் | 39.00 | முடிவுற்றது |
| 5 | | சந்தோஷ் அவென்யூ,மகாவீர் அவென்யூ வார்டு எண்.27, சர்வே எண்.164, 160, 163ல் பூங்கா அமைத்தல் | 49.00 | முடிவுற்றது |

## 2. நமக்கு நாமே திட்டம்

குன்றத்தூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 7 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | நமக்கு நாமே திட்டம் 2021-22 | பி.கே.வி மகா நகரில் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 50.00 | முடிவுற்றது |
| 2 | | அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 20 எண்ணிக்கை கழிப்பிடங்கள் கட்டுதல் | 22.00 | முடிவுற்றது |
| 3 | நமக்கு நாமே திட்டம் 2022-2023 | வார்டு எண்.1-ல் 12 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 1.60 | முடிவுற்றது |
| 4 | | வார்டு எண்.7-ல் 51 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 8.20 | முடிவுற்றது |
| 5 | | வார்டு எண்.18-ல் 100 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 13.00 | முடிவுற்றது |
| 6 | | வார்டு எண்.27-ல் 48 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 6.30 | முடிவுற்றது |
| 7 | | வார்டு எண்.28-ல் 30 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 4.80 | முடிவுற்றது |

## 3. 15வது நிதிக்குழு மான்யம் 2021-2022

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-2022 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 5 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | 15வது நிதிக்குழு மான்யம் 2021-22 (Untied) | விஜயராஜா நகர் மெயின் ரோடு, விஜயராஜா நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருவில் தார்சாலை அமைத்தல் | 30.00 | முடிவுற்றது |
| 2 | | சாய் சரண்யா நகர் மெயின் ரோடு, 1வது தெருவில் தார்சாலை அமைத்தல் | 17.04 | முடிவுற்றது |
| 3 | 15வது நிதிக்குழு மான்யம் 2021-22 (Tied) | வார்டு எண்.26 ஜெகநாதபுரம் தெரு, 1வது தெரு, பவானியம்மன் கோயில் தெரு, ஜெகநாதபுரம் 3வது தெரு, காந்தி சாலை 1வது தெரு, எம்.ஜி.ஆர் குறுக்கு தெரு, எம்.ஜி.ஆர் தெரு, காமராஜர் சாலை, காமராஜர் குறுக்கு தெரு, சாய் அவென்யூ, 1வது தெரு 3வது தெரு, 4வது தெரு, சேக்கிழார் நகர் 2வது தெரு, அஷ்டலட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் 90mm PVC பைப்லைன் அமைத்தல் | 8.00 | முடிவுற்றது |
| 4 | | வார்டு எண்.29 பெருமாள் கோயில் தெரு, பெருமாள் கோயில் குறுக்கு தெரு, சூர்யா அனெக்ஸ் 4வது தெரு, அம்மன் கோயில் தெரு, குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் 90mm PVC பைப்லைன் அமைத்தல் | 7.80 | முடிவுற்றது |
| 5 | | செந்தாமரை நகர், 1வது தெரு, 2வது தெரு 3வது தெரு, 4வது தெரு, தேவி நகர் 2வது குறுக்கு தெரு, 3வது குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் 90 mm பி.வி.சி பைப்லைன் மற்றும் பொன்னியம்மன் கோயில் தெருவில் 140 mm பைப்லைன் அமைத்தல் | 7.93 | முடிவுற்றது |
| 6 | | மீஞ்சூர்-வண்டலூர் வெளிவட்டச் சாலையில் அமைந்துள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டப் பகுதிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 46.83 | பணி நடைபெற்று வருகிறது. |

## 4. 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 (Untied) | வார்டு எண்.20, மணிகண்டன் நகர் காந்தி சாலை மெயின் ரோடு தார்சாலை புதுப்பித்தல் பணி | 20.00 | முடிவுற்றது |
| 2 | | வார்டு எண்.20, மணிகண்டன் நகர் மெயின் ரோடு தார்சாலை புதுப்பித்தல் பணி | 22.00 | முடிவுற்றது |
| 3 | | வார்டு எண்.20, மணிகண்டன் நகர் பி டாட் ஜி மற்றும் ராஜராஜன் தெருவில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 6.00 | முடிவுற்றது |
| 4 | 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 (Tied) | குன்றத்தூர் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான BOV வாகனங்கள் (15 எண்ணிக்கை) சப்ளை செய்தல் | 30.00 | முடிவுற்றது |
| 5 | | குன்றத்தூர் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான LCV வாகனங்கள் (6 எண்ணிக்கை) சப்ளை செய்தல் | 43.80 | பணி நடைபெற்று வருகிறது |

## 5. தூய்மை இந்தியா திட்டம் 2.0 – 2022-2023

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | தூய்மை இந்தியா திட்டம் 2.0 – 2022-2023 | மகா நகரில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைத்தல் | 46.00 | பணி நடைபெற்று வருகிறது |
| 2 | | வார்டு எண்.20, மணிகண்டன் நகர் மெயின் ரோடு தார்சாலை புதுப்பித்தல் பணி | 22.00 | பணி நடைபெற்று வருகிறது |
| 3 | | திடக்கழிவு மேலாண்மை திட்ட தளத்தில் (மீஞ்சூர் to வண்டலூர் புறவழி சாலை) நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைத்தல் | 46.00 | பணி நடைபெற்று வருகிறது |
| 4 | | தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் – 58 எண்ணிக்கை | 5.41 | பணி நடைபெற்று வருகிறது. |

## 6. அறிவிப்புகள் 2022-2023

குன்றத்தூர் நகராட்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2022-2023 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | அறிவிப்புகள் 2022-2023 | குன்றத்தூர் நகராட்சியின் நில அளவை எண்.1395/2-ல் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் | 50.00 | முடிவுற்றது |

## 7. வெள்ளத்தடுப்பு நிதி

குன்றத்தூர் நகராட்சியில் வெள்ளத்தடுப்பு நிதியின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ளப்பட்டு 2 எண்ணிக்கையிலான பணிகள் முடிவுற்றுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1. | வெள்ளத்தடுப்பு நிதி 2021-2022 | சம்மந்தம் நகர், ஐஸ்வர்யம் நகர் மற்றும் ஸ்ரீராம் நகரில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1570 | முடிவுற்றது |
| 2 | | மேத்தா நகர் பகுதியில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1100 | முடிவுற்றது |
| 3 | வெள்ளத்தடுப்பு நிதி 2022-2023 | வார்டு எண்.18 மற்றும் 19, மேத்தா நகர் (மேற்கு) மற்றும் குட்டி விநாயகர் தெரு ஆகிய பகுதிகளில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 742 | பணி நடைபெற்று வருகிறது |
| | | வார்டு எண்.20, பிரித்திவி நகர் மற்றும் விஷால் நகர் ஆகிய பகுதிகளில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 382 | பணி நடைபெற்று வருகிறது |
| 4 | | வார்டு எண்.18, மேத்தா நகர் பிரதான சாலையில் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 218 | பணி நடைபெற்று வருகிறது. |

## 8. முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 2022-2023

குன்றத்தூர் நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின்படி கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2022-2023 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின்படி நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் உணவு வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி | 38.00 (1நபருக்கு ரூ.12.70/-) | பணி நடைபெற்று வருகிறது. |
| 2 | | குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைத்தல் பணி | 28.00 | பணி நடைபெற்று வருகிறது. |

## 9. அம்ரூத் 2.0 – 2022-2023

குன்றத்தூர் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 – 2022-2023 | வார்டு எண்.26, சர்வே எண்.1401 பாலவராயன் குளம் மேம்படுத்துதல் பணி | 212.00 | பணி நடைபெற்று வருகிறது. |

## 10.சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்

குன்றத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ளப்பட்டு 1 எண்ணிக்கையிலான பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பணியின் நிலை |
|---|---|---|---|---|
| 1 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22 | சேக்கிழார் நகரில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 11.10 | முடிவுற்றது |
| 2 | 2022-2023 | திருநாகேஸ்வரம் காலனி அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 13.57 | பணி நடைபெற்று வருகிறது. |
| 3 | | நத்தம் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 13.57 | பணி நடைபெற்று வருகிறது. |

**சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல் – திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் – தனி நபர் கழிப்பிடம் கட்டுதல் :-**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 58 வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறிந்து, அவற்றில் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தற்போது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லா நகராட்சியாக உள்ளது.

பொது விவரங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| 1 | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | : | 42126 |
| 2 | தற்போதைய மக்கள் தொகை | : | 79784 (தோராயமாக) |
| 3 | மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை | : | 17946 (தோராயமாக) |
| 4 | பரப்பளவு | : | 9 ச.கி.மீ |
| 5 | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 30 |
| 6 | மொத்த தெருக்களின் எண்ணிக்கை | : | 1315 |
| 7 | நகராட்சி துப்புரவு பணியாளர்கள் | : | 13 |
| 8 | தனியார் துப்புரவு பணியாளர்கள் | : | 102 |
| 9 | திடக்கழிவு சேகரிக்கப்படும் இடத்தின் பரப்பளவு | : | சர்வே எண்.31/1, 75 சென்ட் , நடைபாதை தெரு, வெங்கடாபுரம் கிராமம் |
| | முதல் நிலை சேகரிப்பு | | |
| 1 | பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (BOV) | | 18 |
| 2 | ஆட்டோ (LCV) | | 1 |
| 3 | மூன்று சக்கர மிதிவண்டிகள் | | 8 |
| 4 | தள்ளுவண்டிகள் | | 6 |
| 5 | டிராக்டர் | | 7 |
| 6 | காம்பேக்டர் | | 1 |
| | இரண்டாம் நிலை சேகரிப்பு | | |
| 1 | டிராக்டர் | | 1 |
| 2 | காம்பேக்டர் | | 1 |

30 வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் பொருட்களை கிரீன் சர்வீஸஸ் டிரஸ்ட் நிறுவன துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரித்து அதனை மறுசுழற்சி செய்யும் நபரிடம் விற்பனை செய்து, அதன் தொகையினை உரிய துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

நகராட்சி குப்பை கிடங்கில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவன பணியாளர்கள் மூலம் குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்:33553/2022/EA2-SWM-4, நாள்:10.01.2023-ன்படி 30 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டு, தனியார் மூலம் (30 வார்டுகளில்) பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது..

**டெங்கு காய்ச்சல் ஒழிப்பு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்** :-

70 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களைக் கொண்டு கீழ்க்காணும் விவரப்படியான டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. பைரத்திரம் மருந்தினை பயன்படுத்தி கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளுதல்
2. விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்
3. டெங்கு பற்றிய விழிப்புணர்வு பேரணி நடத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் அமைத்தல்
4. ஒருங்கிணைந்த துப்புரவு பணி மேற்கொள்ளுதல் மற்றும் கொசு உற்பத்தியாகும் கலன்களை கண்டறிந்து அழித்தல்
5. டெங்கு விழிப்புணர்வு குறித்து மருத்துவ முகாம் நடத்துதல்
6. டெங்கு குறித்து சிறப்பு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல்
7. டெங்கு தடுப்பு பணியாளர்கள் மூலம் குழுவாக சென்று டெங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு அடையாள வில்லைகளை ஒட்டுதல்
8. தினசரி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காயச்சல் காரணமாக பாதிப்படைந்தவர்கள் விவரங்களை சேகரிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சொந்தக்கட்டிடங்கள்**

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு அவ்வப்போது தேவையான பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டன.

**நீர்நிலை ஆதாரங்கள்**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமராவதி குளம் மற்றும் பாலவராயன் குளம் ஆகிய 2 எண்ணிக்கையிலான குளங்கள் நகராட்சிக்கு சொந்தமானதாகும். அருள்மிகு நாகேச்சர சுவாமி திருக்கோயில், அருள்மிகு பொன்னியம்மன் கோயில் திருக்குளம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் திருக்குளம், வாணியக்குட்டை, நத்தம் குளம் ஆகிய குளங்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமானதாகும்.

## பொதுசுகாதாரம் மற்றும் பணியமைப்பு விவரம் :-

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் 01.04.2022 முதல் 31.03.2023 முடிய திரு.சிவமுருகன் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்துள்ளார்

பொதுசுகாதாரப் பிரிவு பணியாளர்கள் விவரம்

1. துப்புரவு மேற்பார்வையாளர் - 1
2. துப்புரவு பணியாளர்கள் - 13

மேலே குறிப்பிட்ட சிப்பந்திகளுக்காக அறிக்கையாண்டில் ஏற்பட்ட செலவு ரூ.70.93 இலட்சம் ஆகும்.

**கொசு ஒழிப்பு பணி** :

அறிக்கையாண்டில் Temephos 50% E.C. 200 லிட்டர் வாங்கி பயன்படுத்தப்பட்டது. மேலும் நகராட்சியின் மூலம் 100 லிட்டர் பைரத்திரம் எக்ஸ்ட்ராக்ட் 2% வாங்கி வளர்ந்த கொசுக்களை புகைதெளிப்பான் மூலம் அழிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**துப்புரவு :-**

தினசரி தெருக்களில் குப்பையும், மணலும், மற்ற கழிவுப் பொருட்களும் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மூலம் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

| வ.எண். | வாகனங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டிராக்டர் | 7 |
| 2 | காம்பேக்டர் | 1 |
| 3 | பேட்டரி வாகனம் (BOV) | 18 |
| 4 | TATA Ace வாகனம் (LCV) | 1 |

## உரக்கிடங்கு

உரக்கிடங்கின் விஸ்தீரணம் 0.70 ஏக்கர் உள்ளது. இந்நகராட்சியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

## கழிப்பிடங்கள்

இந்நகராட்சியில் 1 கட்டண கழிப்பிடம் மற்றும் 4 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## வருவாய் பிரிவு

இந்நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான காலிமனை குத்தகை, சடையாண்டீஸ்வரர் கோயில் தெரு கடைகள், தினசரி தற்காலிக நாளங்காடி, நவீன கட்டண கழிப்பிடம், பேரூந்து நுழைவு கட்டணம், டேங்கர் லாரி மூலம் கழிவு அகற்றுதல் போன்ற குத்தகை இனங்கள் மூலம் ரூ.14.34 இலட்சம் வருவாய் வரப்பெற்றது.

## பேரூந்து நிலையம்

இந்நகராட்சியின் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் 'சி' வகைப்பாட்டை சேர்ந்ததாகும். 2000ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது.

## பூங்காக்கள்

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் விவரப்படி பூங்காக்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1. சேக்கிழார் நகர் பூங்கா
2. சம்மந்தம் நகர் பூங்கா
3. தேவகி நகர் பூங்கா
4. ஐஸ்வர்யம் நகர் பூங்கா
5. பூபதி அவென்யூ பூங்கா
6. மெட்ரோ ஹைடெக் ரெஸிடன்சி பூங்கா
7. மேத்தா நகர் பூங்கா
8. மணிகண்டன் நகர் பூங்கா
9. தேவி நகர் பூங்கா
10. சந்தோஷ் அவென்யூ பூங்கா

**கட்டிட உரிமம்**

அறிக்கை ஆண்டில் 233 கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது

**அளவு கடப்புகள்**

புதியதாக ஏற்படும் கடப்புகளை அவ்வப்போது அகற்றப்பட்டன. ஆண்டு முடிய ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

**பொது வருமானம்**

| வ.எண். | வரி விகிதங்கள் (சொத்து வரி) | அரையாண்டு வீதம் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் |
|---|---|---|
| 1 | பொது காரியங்களுக்கு | 4 % |
| 2 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் | 2 % |
| 3 | தெருவிளக்கு | 2 % |
| 4 | துப்புரவுப் பணி | 2 % |
| | மொத்தம் | 10% |

கட்டிடத்தோடு சேராத காலிமனை வரி அரையாண்டிற்கு காலிமனைக்கான நில மதிப்பின் பேரில் 40 பைசா, 30 பைசா, 20 பைசா வீதம் கணக்கிடப்படுகிறது.

**சொத்துவரி**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2022-2023ம் ஆண்டிற்கான மொத்த சொத்துவரி விதிப்புகள் 10511 ஆகும். அதன் கேட்பு ரூ.192.79 இலட்சமாகும்.

**குடிநீர் கட்டணம்**

மொத்த வரி விதிப்புகள் - 2416

மொத்த கேட்புத் தொகை - ரூ.50.09 இலட்சம்

## தொழில்வரி

குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக தொழில்கள், மரபுத் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி விகிதங்கள் தமிழ்நாடு தொழில்வரி சட்டம் 9/9-4ன் படியும் மற்றும் 12/95-ன்படியும் வெளியிடப்பட்ட அட்டவணைப்படி வசூலிக்கப்படுகின்றன. 12.01.1999-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.11ன்படி 01.10.2018 முதல் தொழில்வரி விகிதங்களை 35 சதவீதம் உயர்வு செய்து திருத்தி அமைக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன.

மொத்த வரி விதிப்புகள் - 447

மொத்த கேட்புத் தொகை - ரூ.25.29 இலட்சம்

**தணிக்கை தடைகள்**

2022-2023ம் ஆண்டின் ஆரம்பத்தில் 208 தணிக்கை தடைகள் நிலுவையில் இருந்தது. அறிக்கையாண்டில் 101 பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நிதி நிலைமை**

இந்நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி ஆகியவற்றில் இவ்வாண்டு வருமானம் ரூ.669.96 இலட்சம் மற்றும் செலவினம் ரூ.635.22 இலட்சமாகும்.

**கடன்கள்**

இந்நகராட்சியில் திருப்பி செலுத்தப்பட வேண்டிய கடன் ஏதுமில்லை

**தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (National Urban Livelihoods Mission):-**

குன்றத்தூர் நகராட்சியில் சொர்ண ஜெயந்தி ரோஜ்கார் யோஜனா திட்டம் (SJSRY) முடிவடைந்து 12.11.2015 முதல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) என்ற திட்டம் துவக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**SCHEME FOR URBAN STREET VENDOR (SUSV)**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளின் விபரம் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மொத்த பயனாளிகள் 69 நபர்களுக்கு நகராட்சியின் மூலம் வியாபார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளது.

**சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் (PM – SVANidhi)**

குன்றத்தூர் நகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் – PM – SVANidhi திட்டத்தில் கொரோனா ஊரடங்கு காலத்தில் சாலையோர வியாபாரிகள் பாதிக்கப்பட்டதால் அவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட 69 பயனாளிகளில் 55 பயனாளிகளுக்கு தலா ரூ.1000/- வீதம் இரண்டு தவணைகளாக நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது.

சாலை வியாபாரிகளுக்கு சாலை வியாபாரிகளுக்கு PM- SVANidhi திட்டத்தில் தலா ரூ.10,000/- வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்தரவின்படி 85 சாலையோர வியாபாரிகள் தேர்வு செய்து வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மேலும் கூடுதலாக 214 இலக்கு நிர்ணயித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சியின் மொத்த கூடுதல் இலக்கான 214 சாலையோர வியாபாரிகளில் 6 பயனாளிகளின் விவரங்கள் PM- SVANidhi திட்ட வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் வங்கிகளின் மூலம் 4 பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வங்கிகள் மூலம் தலா ரூ.50,000/- கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## மின் ஆளுமை

நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும், இந்நகராட்சியில் புதிய மென்பொருள் ( UTIS - Urban Tree Information System) மூலம் நகராட்சியின் சேவைகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள், புதிய கணக்குமுறை, கட்டிட அனுமதி, வரவு செலவு கணக்குகள், மதிப்பீடு அறிக்கை, தணிக்கை தடை ஆகியவைகள் கணினியில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் இணையதளம் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணினியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் மற்றும் பொதுமக்கள் தங்களது சொத்து வரி , குடிநீர் கட்டணம், தொழில் வரி, வரியில்லா இனங்கள் (Non Tax), ஆகியவைகள் அனைத்தும் இணையதளம் மூலம் செலுத்தும் வசதிகள் நடைமுறையில் உள்ளது. இவ்வலுவலக அனைத்து பிரிவுகளுக்கும் இணையதள வசதியுடன் கணினிகள் வழங்கப்பட்டு அலுவலக நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட உரிமம் அனுமதி அளித்தல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல், அசையா சொத்துக்கள் குறித்த விவரம், தணிக்கை தடைகள் மற்றும் நகராட்சி கணக்குகள் புதிய மென்பொருள் (UTIS) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பொது

அறிக்கையாண்டில் குன்றத்தூர் நகர பகுதிவாழ் மக்கள் மற்றும் வரி செலுத்துபவர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்பவும், இதர திட்டங்கள் வாயிலாகவும், தரமான சாலை வசதி, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வடிகால் வசதி, மழைநீர் சேமிப்பு வசதி செய்யப்படுவதுடன் ஆண்டுதோறும் சிறப்பான முறையில் மேற்படி வசதிகளை செய்து மக்கள் பயன் அடைய வேண்டும் என்ற குறிக்கோள் கடைபிடிக்கப்பட்டு நகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தில் நல் ஒத்துழைப்பு நல்கிய திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வலுவலக பிரிவு அலுவலர்களாகிய நகராட்சி பொறியாளர், மேலாளர், வருவாய் அலுவலர், மற்றும் அனைத்து அகப்பணியாளர் மற்றும் புறப் பணியாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையர்

நகராட்சி அலுவலகம் குன்றத்தூர் நகராட்சி

குன்றத்தூர்